**வகுப்பு : 11**

| தேர்வு எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# திருப்புதல் தேர்வு - 2023

நேரம் : 3.00 மணி] **வரலாறு** [மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி – I

**I. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** **20X1=20**

1. ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையான இருந்தது.
   அ) வேளாண்மை ஆ) மட்பாண்டம் செய்தல் இ) கைவினைத்தொழில்கள் ஈ) மீன் பிடித்தல்
2. மேல் கங்கைச் சமவெளிப் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
   அ) குரு. பாஞ்சாலம் ஆ) கங்கைச்சமவெளி இ) சிந்துவெளி ஈ) விதேகா
3. வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியது.
   அ) இரும்பு ஆ) வெண்கலம் இ) செம்பு ஈ) பித்தளை
4. நல்ல நிர்வாகம் பற்றிய வழிபாட்டும் நூலாகும்.
   அ) அர்த்தசாஸ்திரம் ஆ) இண்டிகா இ) ராஜதரங்கிணி ஈ) முத்ராராட்சசம்
5. கீழ்க்காணும் கூற்றுகளை வாசித்து தவறான கூற்றை வெளிக் கொணர்க.
   (i) களப்பிரர்கள் சைவத்தை ஆதரித்தனர்
   (ii) பல்லவரையும் பாண்டியரையும் களப்பிரர் தோற்கடித்தனர்
   (iii)இக்சவாகுகள் வேதவேள்விகளை ஆதரித்தனர்
   (iv) உப்பு வியாபாரிகள் உமணர் என்றழைக்கப்பட்டனர்.
   அ) (i) மற்றும் (ii) ஆ) (ii) மற்றும் (iii) இ) (i) மற்றும் (iii) ஈ) (iii) மற்றும் (iv)
6. சக சத்ரப்களில் மிகவும் புகழ் பெற்றவர்
   அ) மொகா ஆ) ருத்ரதாமன் இ) அஸிலிஸ் ஈ) யசோவர்மன்
7. கீழ்க்கண்டவற்றில் எது குப்தர் காலத்துக் குடைவரைக் குகைக் கோவில் இல்லை?
   (i) உதயகிரி குகை (ஒடிசா)
   (ii) அஜந்தா – எல்லோரா குகை (மகாராஷ்டிரா)
   (iii) எலிப்பண்டா குகை (மகாராஷ்டிரா)
   (iv) பாக் (மத்தியப் பிரதேசம்)
   அ) (i) ஆ) (ii) இ) (iii) ஈ) (iv)
8. ------ என்பவர் அயலுறவு மற்றும் போர்கள் தொடர்பான அமைச்சர் ஆவார்.
   அ) குந்தலா ஆ) பானு இ) அவந்தி ஈ) சர்வாகதா
9. ஆதிசங்கரரால் எடுத்துரைக்கப்பட்ட கோட்பாடு
   அ) அத்வைதம் ஆ) விசிஷ்டாத்வைதம் இ) சைவசித்தாந்தம் ஈ) வேதாந்தம்
10. சரியாகப் பொருத்தி, விடையைத் தெரிவு செய்க.
    (i) ராமசந்திரர் – 1. காகதீயர்
    (ii) கான்–இ–ஜஹான் – 2. பத்மாவத்
    (iii) மாலிக் முஹமத் ஜெய்சி – 3. மான் சிங்
    (iv) மன் மந்திர் – 4. தேவகிரி
    அ) 2,1,4,3 ஆ) 1,2,3,4 இ) 4,1,2,3 ஈ) 3,1,2,4
11. பாண்டியர்களில் முதல் தலைநகரமாகும்.
    அ) மதுரை ஆ) காயல்பட்டினம் இ) கொற்கை ஈ) புகார்
12. கீழ்கண்டவற்றை காலவரிசைப்படுத்துக.
    அ) சங்கம வம்சம், ஆரவீடு வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம்
    ஆ) சங்கம வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்
    இ) சாளுவ வம்சம், சங்கம வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்
    ஈ) சங்கம வம்சம், துளுவ வம்சம், சாளுவ வம்சம், ஆரவீடு வம்சம்
13. பொருத்துக.
    (i) கபீர் – 1. சாகித்திய லாகிரி
    (ii) சூர்தாஸ் – 2. ஷேக் தாதி
    (iii) சூபியிஸம் – 3. சம்பந்தர்
    (iv) கூன் பாண்டியன் – 4. நெசவாளர்
    அ) 2,3,4,1 ஆ) 4,1,2,3 இ) 2,4,3,1 ஈ) 3,4,2,1
14. கூற்று : பாபர் முதலாம் பானிப்பட் போரில் வெற்றி பெற்றார்.
    காரணம்: பாபர் பீரங்கிப் படையை போரில் பயன்படுத்தினார்.
    அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும் ஆ) கூற்று தவறு: காரணம் சரி
    இ) கூற்று தவறு: காரணமும் தவறு
    ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல
15. சிவாஜியின் இராணுவ அமைப்பில் மிகச்சிறிய படை அலகின் தலைவராக இருந்தார்.
    அ) நாயக் ஆ) ஹவில்தார் இ) பர்கிர் ஈ) ஷைலேதார்
16. "தமிழ் அச்சுப்பதிப்பின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார்.
    அ) இராபர்டோ டி நொபிலி ஆ)அல்போனடசோ டி அல்புகர்க்
    இ) ஹென்ரிக்ஸ் ஈ) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா

17. வங்காளத்தில் இரட்டை ஆட்சியை அறிமுகப்படுத்தினார்.
அ) வாரன்ஹேஸ்டிங்ஸ் ஆ) டியூப்ளே இ) காரன்வாலிஸ் ஈ) ராபர்ட் கிளைவ்
18. தென் இந்தியாவில் முதல் இருப்புப் பாதை போக்குவரத்து 1856ல் சென்னையிலிருந்து ------ வரை இயக்கப்பட்டது.
அ) வாணியம்பாடி ஆ) காட்பாடி இ) விழுப்புரம் ஈ) அரக்கோணம்
19. வேலூர் புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்த நிகழ்வு ஆகும்.
அ) என்ஃபீல்டு ரக துப்பாக்கித் தோட்டாக்கள் ஆ)நவீன சீருடை மாற்றம்
இ) புதிய தலைப்பாகை ஈ) கொழுப்பு தடவப்பட்ட தோட்டக்கள்
20. "வேதங்களை நோக்கி திரும்புக", என்று முழக்கமிட்டவர் ------- ஆவார்.
அ) இராஜா ராம்மோகன்ராய் ஆ)தயானந்த சரஸ்வதி
இ) விவேகானந்தர் ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

## பகுதி - II 7x2=14

**ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண்.30–க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.**

21. ஹோமினின் குறித்து சிறு குறிப்பு வரைக.
22. ஜென்ட் அவஸ்தாவைப் பற்றி எழுதுக.
23. பிம்பிசாரர் எவ்வாறு மகதப் பேரரசை விரிவுப்படுத்தினார்?
24. சந்திரகுப்தருக்கும் செலியுகஸ் நிகேடருக்கும் இடையே நிகழ்ந்த போரின் விளைவு என்ன?
25. மதுரா குறித்து பாஹியான் குறிப்பிடுவதைச் சுருக்கமாக எழுதுக.
26. தக்கோலப் போரின் முக்கியத்துவம் குறித்துக் கூறுக.
27. நிலத்தைக் கணக்கிடுவதற்கான வெவ்வேறு அலகுகளைக் கூறுக.
28. முகலாயக் கட்டடக் கலையின் மறுவடிவமாகக் கருதப்படுவது எது? அதன் வடிவமைப்பை விவரிக்கவும்.
29. ஆளுநர் தாமஸ் மன்றோ பற்றுச் சிறு குறிப்பு வரைக.
30. இராமலிங்க அடிகளார் பற்றி நீவிர் அறிவன யாவை?

## பகுதி - III 7x3=21

**ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண்.40–க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.**

31. சிந்து நாகரிகம் நிலவிய பகுதியின் எல்லைகளைக் குறிப்பிடுக.
32. இரண்டாம் நகரமயமாக்கத்துக்குப் பிறகு, வளர்ச்சி பெற்ற நகரங்கள் பற்றி எழுதுக.
33. சோழ அரசர்களில் தலை சிறந்தவன் கரிகாலன்.
34. "இரண்டு வணிகச் சுற்றுகளின் மையமாக முசிறி இருந்தது" எவ்வாறு?
35. புகழ்பெற்ற சைவ மூவர்கள்.
36. பாண்டிய அரசு குறித்து வெளிநாட்டுப் பயண வரலாற்றாசிரியர்களின் குறிப்புகளைக் கூறுக.
37. கோல்கொண்டாகோட்டை எங்கே கட்டப்பட்டது? அதன் அமைப்பை விவரி.
38. பக்தி இயக்கத்தின் விளைவுகளைச் சுட்டிக்காட்டுக.
39. பழவேற்காடு
40. 1857 ஆண்டு புரட்சியின் விளைவுகள் யாவை?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7x5=35

41. அ) வரலாற்றுக்கு முந்தைய இந்திய குறித்து விளக்கு.
**(அல்லது)**
ஆ) வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் குறித்து ஒரு கட்டுரை வரைக.
42. அ) களப்பிரர் என்போர் யார்?அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?
**(அல்லது)**
ஆ) கலைக்கும் இலக்கியத்துக்குமான கனிஷ்கரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கவும்.
43. அ) ஹர்ஷரின் வடஇந்தியப் படையெடுப்புகள் குறித்து விவரி.
**(அல்லது)**
ஆ) மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக.
44. அ) அலா–உத்– தின் கில்ஜியின் பொருளாதாரச் சீர்த்திருத்தங்களை விவாதிக்கவும்.
**(அல்லது)**
ஆ) விஜயநகரப் பேரரசின் சமுக மற்றும் பொருளாதார நிலையினை விவரி.
45. அ) ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கை எவ்வாறு முகலாயப் பேரரசின் அழிவுக்கு வழி வகுத்தது?
**(அல்லது)**
ஆ) **இந்திய வரைபடத்தில் குப்த பேரரசின் எல்லையை வரைந்து கீழ்கண்ட இடங்களைக் குறிக்கவும்.**
1. நானந்தா 2. உஜ்ஜயினி 3. மதுரா 4. கிர்னார் 5. காஞ்சி
46. அ) கர்நாடகப் பகுதிகளின் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் இடையே நடைபெற்ற போர்களுக்கான காரணங்கள் யாவை?
**(அல்லது)**
ஆ) நவீனக் கல்விமுறைக்கு இரண்டாம் சரபோஜியின் பங்கிளை விளக்குக.
47. அ) வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப் படைத் திட்டத்தினைப் பற்றி விவரி.
**(அல்லது)**
ஆ) 19ம் நூற்றாண்டின் எவையேனும் ஐந்து சமூக சீர்திருத்தவாதிகள் மற்றும் அவர்கள் நிறுவிய அமைப்புகள் பற்றிய காலக்கோடுகள் வரைக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com